# பக்தி இலக்கியங்கள்வழி தமிழர் இசைக்கருவிகள்

**பீ. பெரியசாமி**

தமிழ்த்துறைத்தலைவர், டி.எல்.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
விளாப்பாக்கம் – 632 521, தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை**

பக்தி நெறியோடு இணைந்து நிற்பது இசைக்கலை. இசைக்கு மூலகாரணியாக இருப்பவை இசைக்கருவிகள். இறைவன் தானும் இசைந்து பாடும் பக்தர்களையும், கேட்கும் அடியார்களையும் இசைவிக்கிறான். அவ்வாறான தமிழ் பக்தி இலக்கியங்களில் இசைக்கூறுகளும் இசைக் கருவிகளும் இடம்பெற்றுள்ள தன்மையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தோலிசைக் கருவிகள்**

பெரிய புராணத்துள் குறிப்பிடப்பெறும் தோலிசைக் கருவிகள் முரசம், துந்துபி, முழவு, தண்ணுமை, படகம், ஆகுளி (சிறுகட்பறை), பேரி, பம்பை, துடி, திமிலை, தட்டி, தொண்டகம் (குறிஞ்சிப்பறை) முதலியன. முரசமும் முழவமும் சிறந்த மங்கலக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அடர்ந்த கூந்தலை உடைய மங்கையரின் ஆடலரங்குகளில் முழவு பயன்படுத்தப்பட்டுள்ள தென்பதை,

**"முழவறாதன மொய்குழலியர் நட அரங்கம்"**

- *(ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்-3157)*

என்ற சேக்கிழாரின் பாடலடி புலப்படுத்தும். முரசறைந்து பொருட்கொடை அளித்த குறிப்பு பற்றிய செய்தி,

**"இன்றுங்கள் மனை எல்லைக்குட்பட்டு நெற்குன்றெல்லாம்
பொன்றங்கு மாளிகையிற் புகப் பெய்து கொள்க என
வென்றி முரசறைவித்தார் மிக்க புகழ்ப்பரவையார்"**

- (**ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்**-*3182)*

என்ற பெரிய புராண அடிகளிலிருந்து பெறப்படுகிறது. முரசின் பயன்பாடு பலவகைப்பட்டதாய் பழங்காலந் தொட்டே இருந்து வந்திருக்கின்றது. முரசு திண்ணிய தோல்வார்களால் வலித்துக் கட்டப்பட்டது. வீரமுரசு, போர்முரசு, விருந்துண்ண, குருதி பலி கொடுக்கும் போது என்று முரசின் பயன்பாடு நீண்டது.

தாளக் கருவிகளுக்குப் பொதுவான பெயராகவும் பறை குறிக்கப்படுகின்றது. வாரால் விசித்துக் கட்டப்பட்டது. இக்கருவி ஒரு முகம், இருமுகம் உடையது. போர்ப்பறை, வெருப்பறை, வெறியாட்டுப் பறை எனப் பறை பலவகைப்படும். கண்ணப்ப நாயனாராகிய திண்ணன் வேட்டைக்குப் புறப்பட்டபொழுது, முன்னால் கொம்புகள் ஊதப்பட்டன. அதனையடுத்துச் சிறுபறைகள் முழங்கப்பட்டன. பம்பைகள் கொட்டப்பட்டன. இவ்வாறு பல்லோசைகளும் சேர்ந்து அங்கே இசை பெருகிற்று என்ற செய்தியினை,

"**கோடு முன் பொலிக்கவும் குறுங்கணா குளிக்குலம்
மாடு சென்றிசைப்பவும் மருங்கு பம்பை கொட்டவும்
சேடு கொண்ட கைவிளிச் சிறந்த ஓசை செல்லவும்**"

- *(கண்ணப்ப நாயனார் புராணம் -721)*

என்ற இவ் அடிகள் மூலமாகச் சேக்கிழார் பெருமான் விளக்குகிறார். வேடர் கூட்டங்களில் உடுக்கை, ஊதுகொம்பு, பறை போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது கண்ணப்ப நாயனார் புராணச்செய்தி. அதைச்சுட்டும்பாடல்,

**"சில்லரித்துடியும் கொம்பும் சிறுகண் ஆகுளியும்"**

- *(கண்ணப்ப நாயனார் புராணம் -654)*

என்பதாகும் துந்துபி என்ற இசைக்கருவி குறித்த செய்தி,

**"அரிக்குறுந்துடியேயன்றி அமரர் துந்துபியும் ஆர்த்த"**

- *(கண்ணப்ப நாயனார் புராணம்-663)*

என்ற பாடலடி மூலம் பெறப்படுகிறது. வேடுவர் திருவிழாக் காணும்போது பறை, முரசு, மூங்கில் வாத்தியங்களின் பேரோசை கேட்கும் என்று கூறுவதை,

**"தொண்டக முரசும் கொப்பும் துடிகளும் துளைகொள்
எண்டிசை நிறைந்து எழுந்த பேர் ஒலி"**

- *(கண்ணப்ப நாயனார் புராணம்-687)*

என்ற சான்று புலப்படுத்துகின்றது.

**நரம்பு இசைக் கருவிகள்**

நரம்பு இசைக் கருவிகள் ஏழிசைக்கும் பொருந்தி நிற்கக் கூடியவை. சுர அமைப்புகளில் இனிமையாகவும். மென்மையாகவும் பொருள்படுமாறு பேசும் திறமுடையவை, பெரிய புராணத்தில் விபஞ்சி, யாழ், வீணை முதலிய நரம்பிசைக் கருவிகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

**"ஏதமில் விபஞ்சி வீணையாழொளி ஒருபால் ஏத்தும்"**

- *(திருஞானசம்பந்தர் புராணம்-3098)*

என்ற பாடலடியில் விபஞ்சி என்ற இசைக்கருவி குறிக்கப்பெறுகிறது. விபஞ்சி என்றால் ஏழு நரம்புடைய வீணை போன்ற இசைக்கருவி என்பர்.

யாழ் என்ற கருவி பலவகைப்படும். அவை நிலத்திற்கேற்பவும், பண்ணிற்கேற்பவும், மருதயாழ். குறிஞ்சியாழ், பாலை விபஞ்சி என்றும் குறிக்கப்படுகின்றன. யாழ் என்ற நரம்புக் கருவி சங்க காலத்திற்கு முன்பிருந்தே தலைமையான இடத்தைப் பெற்றுள்ளது. ஆழி என்பதன் திரிபே யாழ் என்றும் யாழும், வீணையும் ஒன்றே என்றும் சில அறிஞர்கள் கூறுவர். சங்க இலக்கியத்தில் பதிவு பெறாத, ஆனால், பிற்கால இலக்கியங்களில் பதிவு பெற்றுள்ள நரம்புக்கருவி வீணை என்பது ஐயமுற விளங்கும். திருநாளைப் போவார் புராணத்துள்.

**"போர்வைத் தோல் விசிவாரென்றினையவும் புகலுமிசை**
**நேர் வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலை வகையாற்"**

- *(*திருநாளைப்போவார் புராணம்*-1054)*

என்ற பாடலை நோக்குகையில் வீணை, யாழ், ஆகிய நரம்பிசைக் கருவிகளைப் பற்றி அறிய முடிகிறது. சேக்கிழாரும் வீணைக்கும் யாழுக்கும் வேறுபாடு காட்டவில்லை என்பதும் புலனாகிறது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணத்தில் யாழ் பற்றிய செய்திகள் காணக்கிடக்கின்றன.

**"இறைவன் தன்சீர்**
**திருத்தகும் யாழிலிட்டுப் பரவுவார்"**

**-** *(*திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணம்*-4215)*

திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்கிறார் சேக்கிழார் பெருமான், யாழ்க்கருவியில் இடப்பட்டப் பாடலை இசைத்துப்பாடி இறைவனின் பேரருள் திறத்தைப் பெற்றவர் திருநீலகண்டர் எனக் குறிப்பையும் தருகிறார் பெரிய புராண ஆசிரியர்.

**துளை இசைக்கருவிகள்**

வாயால் ஊதிக் காற்றால் இயக்கப்படும் இசைக்கருவிகள். அவற்றுள் துளையிட்டு வாசிக்கும் கருவியாகிய குழல் மிகச்சிறந்தது. இதனை வாங்கியம் என்றும் கூறுவர். கருங்காலி, செங்காலி, சந்தனம், வெண்கலம் முதலியவற்றாலாகிய குழல்களை விட மூங்கிலாலாகிய குழலே இனிமையிற் சிறந்தது. தாளம், சின்னம், காளம் என்பனவும் துளை இசைக் கருவிகளே. ஆநிரைகள் மேயும்பொழுது வேய்ங்குழலையெடுத்து ஐந்தெழுத்தை அமைத்து வாசித்தவர் ஆனாய நாயனார். துளைக்கருவிக் குழல் இசைப்பதைக் கேட்கும் உயிர்க் கூட்டமெல்லாம் கிளர்ச்சியுற்று நிற்கும்.

**"...கானகத்தின்**
**மேவு துளைக் கருவிக்குழல் வாசனை மேற்கொண்டார்"**

- *(*ஆனாய நாயனார் புராணம்*-937)*

என்ற பெரிய புராண அடிகள் குழல் என்ற இசைக்கருவியைக் குறிக்கிறது. மூங்கிலைத் தேர்ந்தெடுப்பது முதல் இலக்கணப்படி துளையிட்டமைப்பது, வாசிப்பது வரையிலுமுள்ள சிறந்த கலை நுணுக்கச் செய்திகள் ஆனாய நாயனார் புராணத்துள் கூறப்பட்டுள்ளன.

**"முந்தை மறை நூன் மரபின் மொழிந்த முறை எழுந்த வேய்**
**அந்த முதல் நாலிரண்டில் அரிந்து நரம்புறுதானம்**
**வந்த துளை நிரையாக்கி வாயு முதல் வழங்கு துளை**
**அந்தமில் சீர் இடையீட்டின் அங்குலி எண்களின் அமைத்து"**

- *(*ஆனாயநாயனார் புராணம்*-938)*

எடுத்த குழற் கருவி என்று அக்கருவியைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார். அதாவது மூங்கில் நுனியில் நான்கு பங்கிலும், அடியில் இரண்டு பங்கிலும் அரிந்து இடைப்பட்ட பகுதியை எடுத்து, சுரங்களில் எழும் தானங்களின் வந்த துளைகளின் வரிசையை ஏற்படுத்தி முதலில் காற்று உண்டாக்க ஒவ்வோர் அங்குல அளவில் துளைகள் செய்து அமைக்கப்பட்டது தான் துளை இசைக்கருவியாகிய வேய்ங்குழல், இறைவனால் சம்பந்தருக்கு வழங்கப்பெற்ற தாரை சின்னம், காளம் ஆகிய ஊதுகருவிகள் அவருடைய வருகையை மக்களுக்கு உணர்த்தப் பயன்பட்டன.

**கஞ்சக் கருவிகள்**

தாளம், கண்டை என்பவை கஞ்சக் கருவிகளாகக் குறிக்கப்பெறுபவை. பொதுவாக இக்கருவிகள் கணீர் எனும் தாளவோசைக்காக கஞ்சத்தால் செய்யப்படுபவை. கஞ்சம் என்பது வெண்கலத்தைக் குறிக்கும். திருக்கோலக்கா இறைவன் ஐந்தெழுத்துப் பொறிக்கப்பட்ட பொற்றாளத்தைச் சம்பந்தருக்கு அருளினார் என்ற பெரிய புராணச் செய்தி பொற்றாளம் என்ற கஞ்சக் கருவியைப் பற்றிக் கூறுகின்றது.

**"பிள்ளையார் திருத்தாளங் கொடுபாடப் பின்பு பெரும்**
**பாண்ணார் தாம்**
**தெள்ளமுத இன்னிசையின் தேமபொழி தந்திரியாழைச்**
**சிறக்க வீக்கி"**

**-** *(*திருஞான சம்பந்தம் புராணம்*-2356)*

என்ற வரிகளில் ஞானப் பிள்ளையார் திருத்தாளத்தைக் கொண்டு அளவு ஒத்து அறுத்து பதிகம்பாட அதைப் பின் தொடர்ந்து பாணரும் பாடினார் என்பது பெறப்படுகிறது.

**நிறைவுரை**

பாடல்களுக்கு உயிரோட்டத்தை அளிப்பது இசைக்கருவிகளின் இசை ஆகும். இறைவனை ஓர் இசைக் கலைஞர் என்னும் நோக்கோடு நாயன்மார்கள் பதிகங்களைப் பாடியுள்ளனர். மக்களோடு ஒன்றிய மக்கள் பயன்படுத்திய கருவிகள் மட்டுமே நிலைத்து நிற்கக்கூடியவை. இன்று பல இசைக்கருவிகள் காண்பதற்கு அரியனவாய் உள்ளன. சேக்கிழாரின் பாடல்கள் தமிழுக்கும், கருவிப்பாட்டிசைக்கும் கிடைத்த பெருங்கொடையாகும். அவர் தம் இசைக்குறிப்புகள் அக்கால இசையுணர்வையும் பிரதிபலிக்கின்றன. இவ்வாறாக, இசையென்பது தமிழர் வாழ்வோடு இரண்டறக்

ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-1, சனவரி 2020

கலந்த ஒன்றாகவே காலங்காலமாக இருந்து வந்துள்ளது. பக்தி இலக்கிய காலத்தில் சைவமும் வைணவமும் மாறிமாறித் தமிழிசைக்குத் தொண்டாற்றியுள்ளன.

## TAMIL MUSICAL INSTRUMENTS THROUGH DEVOTIONAL LITERATURE

**B. Periyasamy**

Music is the source of devotion, and it is powerful enough to soften the heart. To this day, we are today and forever. Does Matuma play music with Mann? The Lord, beyond the trees, listens to the music, delights in it, and is mesmerized. He also makes music for devotees and listeners. The purpose of this article is to examine the musical features of such Tamil devotional literature. The Lord sang songs with the intention of becoming a musician. The tools used by the people in union with the people are only sustainable. There are many musical instruments available today. Sebhar's songs are a great source of Tamil and instrumental music. He said his recordings reflect the music of the time. Thus music has been a blend of Tamil life for a long time. It is no exaggeration to say that vegetarianism and Vaishnavism have altered and transformed into Tamils during the Bhakti literary era. The way in this article is that we can see that the Devotional Songs are songs. Music is most useful for man from birth to death. We can find the line of this article that has the power to control the mind.